**DVC 14/2025**

**Name** : சுசிலா

Husband **Name** : ஏழுமலை

நாள் : **08.10.2025**

**குறுக்கு விசாரணை**

நான் தற்போது வீட்டில் உள்ளேனா அல்லது வேறு ஏதேனம் வேலை செய்து வருகிறேனா என்றால் வீட்டில் தான் உள்ளேன். எனது முதல் கணவரின் பெயர் அண்ணாமலை என்றால் சரிதான் அவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது முதல் கணவர் அண்ணாமலை ஏற்கனவே திருமணம் ஆன பின்னர் தான் இரண்டாவாதாக திருமணம் செய்தேன் என்றால் சரிதான். எனக்கும் அண்ணாமலைக்கும் சௌதர்யா (எ) சகுந்தலா என்ற ஒரு பெண் குழந்தை பிறந்தது என்றால் சரிதான். மேற்படி நானும் எனது மகள் சௌதர்யா என்ற சகுந்தலாவும் பெரம்பலூரில் வசித்தோம் என்றால் சரிதான். அதன் பின்னர் நான் வேலை செய்வதற்காக வெளிநாடு சென்று விட்டேன் என்றால் சரிதான். அதன் பின்னர் 2009ம் ஆண்டு அண்ணாமலை இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி எதிர்மனுதாரர் ஏழுமலைக்கு 1996ம் ஆண்டே சுதா என்பவருடன் ஏற்கனவே திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். மேற்படி சுதாவிற்கும் எதிர்மனுதாரர் ஏழுமலைக்கும் இரண்டு குழந்தைகள் சதீஷ் மற்றும் பவித்ரா ஆகியோர் உள்ளார்கள் என்றால் சரிதான். எதிர்மனுதாரருக்கும் எனக்கும் எப்படி பழக்கம் என்றால் சோமாசிபாடியில் எதிர்மனுதாரரின் தங்கை பரிமளா உள்ளார் அங்கு எதிர்மனுதாரர் வந்துபோக எனக்கு பழக்கம் ஏற்பட்டது. மேற்படி இறந்த அண்ணாமலை எதிர்மனுதாரருக்கு பெரியப்பா மகன் என்றால் சரிதான். எனக்கும் இவ்வழக்கின் எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடந்ததிற்கு சான்றாக ஏதேனும் ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி கல்யாணத்திற்கு பத்திரிக்கை ஏதும் அச்சடிக்கவில்லை என்றால் சரிதான். ஏழுமலை எனக்கு நகையோ, சீர்வரிசை சாமான்கள் ஏதேனும் கொடுத்தாரா என்றால் இல்லை. நான் தான் எனது பெண் குழந்தைக்கு சீர்வரிசை செய்ய வேண்டும் என்று எதிர்மனுதாரரின் வீட்டில் இருந்து 5 சவரன் நகையை பீரோவில் இருந்து எடுத்து வந்து விட்டேன் என்றால் சரியல்ல. 12.01.2015 அன்று ஷாலினி என்கிற பெண் குழந்தை எனக்கும் எதிர்மனுதாரருக்கும் பிறந்தது என்றால் சரிதான். நானும் எதிர்மனுதாரரும் திருமணம் ஆகாமல் ஒரே வீட்டில் ஒன்றாக இருந்தோம் என்றால் திருமணம் ஆன பின்னர் தான் இருவரும் ஒன்றாக இருந்தோம். எனக்கு எப்போது எதிர்மனுதாரருடன் திருமணம் நடந்தது என்றால சுமார் 13 ஆண்டுகள் ஆகிறது. ஏழுமலை என்ன வேலை செய்கிறார் என்றால் பாத்திர வியாபாரம் செய்து வருகிறார். ஏழுமலைக்கு சொத்து ஏதேனும் உள்ளதா என்றால் இருக்கிறது, அந்த சொத்து விபரம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அதன் பின்னர் நானும் எனது வீட்டிற்கு அருகில் வசிக்கும் குமாருக்கும் கள்ளத்தொடர்பு ஏற்பட்டு

எதிர்மனுதாரரை அடித்தோம் என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக ரிஷிவந்தியம் காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். இந்த நீதிமன்றத்தில் இழப்பீடாக ரூ.20 லட்சம் மற்றும் ஜீவனாம்சம் மாதம் ரூ.20 ஆயிரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரரிடம் பணத்தை பரிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல. மேற்படி எதிர்மனுதாரர் என்னுடன் என்னை ஒரு மனைவியாக பாவித்து வாழ்ந்ததே இல்லை என்றாலும் அவருக்கும் எனக்கும் எந்தவொரும் தொடர்பு இல்லை என்றாலும் சரியல்ல. அதனால் எந்தவொரு இழப்பீடும் என்னால் கோர இயலாது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- (M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்